# யாழ். இந்துக் கல்லூரியில்...

வெளியிடங்களில் சேவை செய்த சொக்கன் 1.9.63இல் யாழ். இந்துக் கல்லூரிக்கு மாற்றலாகி வந்தார். யாழ் இந்துக் கல்லூரி என்றவுடன் தமிழோடீடுபாடுள்ள பலருக்கு ஞாபகம் வருவது இரண்டொரு எழுத்தாளர்களது பெயர்களே. அவர்களுள் ஒருவர் ஆசிரியர் சொக்கனுவார். இந்துக் கல்லூரி இவராலே வளர்ந்திருக்கிறது. இந்துக் கல்லூரியாலே இவரும் வளர்ந்திருக்கிருர். இரு தடவைகள் நாடகத்துக்கான கலைக் கழகப் பரிசையும் சிறுகதைக்கான சாகித்திய மண்டலப் பரிசையும் பெற்ற சொக்கன் கல்லூரிக்கும் பற்பல பரிசுகளைப் பெற்றுக் கொடுக்கத் தவறவில்லை. 1965 ஆம் ஆண்டு யாழ். இந்துக் கல்லூரி மாணவர்கள் ஞானக் கவிஞன் என்னும் நாடகத்தை மேடையேற்றிக் கலைக்கழகப் பரிசைப் பெற்றனர். 1972 ஆம் ஆண்டு அனைத்திலங்கை ரீதியில் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற தமிழ் நாடகப் போட்டியில் கவரி வீசிய காவலன் என்னும் நாடகத்தை மேடையேற்றி முதற் பரிசைப் பெற்றனர். இவற்றையெல்லாம் எழுதி நெறிப்படுத்திய பெருமை சொக்கனையே சாரும்.

இவை மட்டுமன்றி, பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி என்பவற்றிற்கும் மாணவர்களை ஆயத்தம் செய்தனுப்பிப் பல வெற்றிகளை வாங்கிக் கொடுத்தவர் சொக்கன்.

இந்து இளைஞர் கழகத்தின் உபபோஷகராயிருந்து இவர் கழக வளர்ச்சிக்கு அயராது உழைத்தார். கழகச் சார்பில் நடைபெற்ற ஒவ்வொரு நிகழ்ச்சியையும் முன்னின்றாக்கினுர். 1969 இல் இந்து இளைஞர் சார்பில் வெளியிடப்பட்ட காந்தி மலர் இவரது முயற்சிக்கோர் எடுத்துக் காட்டாகும்.

சொக்கன் சிறந்த ஆசிரியர். பொறுமையாக எதையும் ஆயத்தம் செய்த பின்னரே வகுப்பில் அதைப் பயிற்றுவார். நூல் வெளியீட்டுரையாயினுஞ்சரி, ஆய்வுரையாயினுஞ் சரி மேடைப் பிரசங்கமாயினும் சரி அதனை ஏற்கெனவே சொற்பொழிவு வடிவிலே எழுதி ஆயத்தம் செய்த பின்னரே அவற்றை மேடையிலே சமர்ப்பிப்பார். ஆசிரியர்களும் மேடைப் பேச்சாளர்களும் சொக்கனிடமிருந்து கட்டாயம் கற்க வேண்டிய முக்கியமான பண்புகளில் இதுவும் ஒன்ருகும்.

மேல் வகுப்புக்களில் சைவமும் இந்து கலாசாரமும் தமிழும் கற்பித்தவர் ஆசிரியர் சொக்கலிங்கம்... பழகுவதற்கு மிகவும் இனியவரான சொக்கன் எவர்க்கும் உதவும் பண்பு மிக்கவர்.

— காரை. செ. சுந்தரம்பிள்ளை
— இந்து இளைஞன்,
யாழ். இந்துக் கல்லூரி. 1973

*சொக்கன் என்ற செல்லப்பெயரால் எல்லோராலும் அழைக்கப்படும் திரு. க. சொக்கலிங்கம் பண்பு, அடக்கம், ஆற்றல், படிப்பித்தற்றிறமை, மாணவரோடு பழகும் பண்பு என்பவற்ருல் மிகச் சிறந்து விளங்குகின்ருர்.*

— ந. சபாரத்தினம்
கடல் வெளியீட்டு விழா ஆசியுரை